# மீன்பாடும் தேச நினைவுகள்



மின்சார வெளிச்சத்தில் நாட்டுக் கூத்து

**சோமி**
*Batti Central* **இல்**

முற்றவெளி . . .

மட்டக்களப்பின் மையப்பகுதி,

'மட்டக்களப்பு மாநகரசபை' என்ற பெரிய பெயர் பலகை,உயர்ந்து நிற்கும் கட்டடம் அதன் அருகே வாவியோரத்து முற்றவெளி, முன்னால் வெபர் மைதானம் அல்லது முற்றவெளி மைதானம்.கோட்டைச் சுவர் இவையனைத்தையும் இராணுவச் சுருள் முட்கம்பிகளினூடே ஆவலாய்ப் பார்த்தன என் கண்கள். ஆயுதம் தரித்த 3 இராணுவத்தின ரது கண்களும் 2 பொரிஸ்காரரது கண்களும் ஆயுதம் வைத்திருக்கும் இன்னுமொரு நபரது கண்களும் சமகாலத்தில் என்னைப் பார்த்தன. என்பார்வையைத் திருப்பிக் கொண்டே நடக்கிறேன். நினைவுகள் பின்னே ாக்கி நகர்கின்றன.

மட்டக்களப்பு முற்றவெளி அலங்கரிக்கப் பட்டிருந்தது. மாலைப் பொழுதிலிருந்தே எக்கச்சக்க கூட்டம். சிறிதரன், மாபி என்கிற சிறீபவன்(மாப்பிளையின் சுருக்கம்) பவுச்சா இன்னும் சிலர் வின்சன்ற் மகளிர் பாட சாலைக்கு அருகில் இருக்கும் மகளிர் விடுதிக்கு முன்பு சீமைப் பனைகளுக்கு கீழே நின்று கொண்டிருந்தனர்.

அன்றைய காலகட்டத்து இளைஞர்களுக்கு இந்தப் பகுதி மிகப் பெரும் பொழுது போக்குப் பிரதேசம். 'இண்டைக்கு யாரெல்லம் பாடபோற ாங்களாம்' என்று கேட்கும் சிறிதரனுக்கும் வயது 25 தான்.

அது ஒரு பெரிய இசை விழா, ஏ.ஈ.மனோகரன் குரல் மட்டக்களப்பு மையப் பகுதி வரை ஒலிக்கிறது. 'மட்டு நகர் மரகத வீணை மீன்பாடும்..... ' இலங்கையின் முன்னணி பொப் இசை பாடகர்களும் மெல்லிசைப் பாடகர்களும் பாடிகொண்டிருகிறார்கள்.பொப் பாடல்களுக்கு மட்டக்களப்பு இளைஞர்களின் ஆட்டம் பலமாக இருகிறது.

முற்றவெளி முழுவதும் சரியான கூட்டம். மாநகரசபைப் பகுதி ஒளிவெள்ளத்தில் தெரி கிறது. சறோயினி,மலர்,தேவகி இன்னும் சில பெண்கள் அப்பா அம்மவோடு கோட்டைக்கும் அரச அதிபர் பங்களாவுக்குமிடைப்பட்ட ஆற்ற ங்கரைப்பகுதியில் உட்காந்திருக்கிறார்கள். எல்லா இடமும் துள்ளல் பாட்டும் மெல்லிசைப் பாட்டும் இரவு 11 மணி தாண்டிக் கேட்டுக் கொண்டிருகிறது.

தா தையத்தைய தா தையத்தைய....... வந்தேன் இராவண மகாராசன்.... தென்மோடிக் கூத்து சத்தம் முத்தவெளியில் இருந்து வருகிறது.

'என்ன கூத்துக்கு போறயா? ஆரு நம்மட கன்னங்குடா சினத்தம்பி அண்ணாவியாரா போடுறாரு?'

'ஓண்டா......'

'மறுகான்ன நானும் வாறன் அவர் போடுற கூத்த பாத்திட்டே இரிக்கலாமெல்லுவா.....'

'அவளுகளும் கூத்து பாக்க போயிரிக் களுகள்......நீ அவளுகளப் பாத்து கூத்தாடாம வுட்டா சரி'

முழுநிலவு நாளில வருசா வருசம் முத்தவெளியில நடக்கிற கூத்து அதிகம் பிரபலமானது.தென்மோடி வடமோடி 2 வகை கூத்தும் வருசா வருசம் மாறி மாறி நடக்கும். தர்மபுத்திரன் கூத்தும் இராவணன் கூத்தும் பிரபல்யமானவை விடிய விடிய முற்றவெளி களை கட்டியிருக்கும்.

என்ன....இதெல்லம் எப்ப நடந்திச்சு தெரியுமா? நான் பிறக்கிறதுக்கு முந்தி அதாவது 25 வருசத்துக்கு முந்தி. அப்பாதான் இந்தக் கதையளச் சொன்னார்.அதில இருக்கிற சிறீதரன் என்ர அப்பா தான்.நான் பிறந்த பிறகும் கூட மட்டக்களப்பில கூத்து நடந்ததாம்.90க்கு பிறகுதான் முற்றாக நின்று போய் விட்டது.அதுக்குப் பிறகு இந்தப் பகுதி முழுமையான இராணுவ வலையமாகப் போய்விட்டது.இந்தியன் ஆமியும் முத்தவெளியில தங்கியிருந்தவனுகள்.இப்ப இலங்கை இராணுவம் இருக்கு.

## நாலு பொம்பிளப் பிள்ளையளுக்கு நம்மள தெரிஞ்சா அது நமக்குப் பெருமை எண்டுற காலமது.

92 இல் நான் மெதடிஸ்த மத்திய கல்லூரியில் மாணவனாக சேர்ந்து கொண்டேன்.

'சேர் நில்(உடற் பயிற்சி கண்காட்சி க்கான தயார்ப் படுத்தல்) பழகுறதுக்கு இண்டைக்கு எத்தினை மணிவரைக்கும் முத்தவெளிக்குள்ள விடுவானுகள்'.

'காலையில 7 மணியில இருந்து 11 மணிவரைக்கும் '

எனது கேள்விக்கு சுரேசாநந்தம் சேரிடமிருந்து வந்த பதிலிது.

இப்ப நாங்க போவதற்கு அனுமதிக்கப்படும் முற்றவெளி முன்பு டச்சு மற்றும் ஆங்கிலேயர் காலத்து மயானமாக இருந்ததாம்.அருட் தந்தை வெபர் அவர்களின் முயற்சியால் இது பின்னர் மைதானமாக மற்றப் பட்டது இதன ால் இதற்கு வெபர் மைதானம் என்று பெயர் சூட்டப் பட்டது. உண்மையில ஆற்றங்கரை ஓரத்தில் இருக்கும் முற்றவெளியிலதான் கூத்து நடந்தது.அந்தப் பகுதியை இதுவரை நான் கண்ணால் கூடப் பார்த்தது இல்லை. எங்களுக்கு இது மட்டும்தான் முத்தவெளி.

இதுதான் மட்டக்களப்பு நகரில் இருக்கும் நான்கு பாடசாலைகளுக்கான ஒரே மைதானம் (புனித மிக்கேல் கல்லூரி,மெதடிஸ்த மத்திய கல்லூரி,வின்சன்ற் மகளிர் உயர்தப் பாட சாலை, புனித சிசிலியா மகளிர் பாட சாலை ஆகியவை அந்த நான்கு பாடசாலைகளுமாகும்) எங்கள் பாடசாலை விளையாட்டுப் போட்டி காலத்தில் மட்டும் இந்த மைதானத்தை முழுமையாக எங்களால் உபயோகப் படுத்த முடியும்.மைதானத்தை சுற்றி இராணுவ பாதுகாப்பு அரண்கள் இருக்கும்.கிட்டத்தட்ட ஒரு இராணுவப் பாடசாலை மாணவர்களைப் போல சூழல் எங்களை மாற்றி விட்டிருக்கும்.

## 'இவனுகளை இங்கயிருந்து விரட் டணும்.நம்மட மைதானத்தில விளையாட நம்மள வுடுறதுக்கு அவனிட்ட கையேந்த வேணுமாம் நீங்க போய் இளிச்சிக் கொண்டு நில்லுங்க.....அவனுகள் என்ன சோக்கா நம்மட இடத்துல விளையாடுறானுகள்'

ஆன, அப்ப எங்களுக்கு அது பெரிய பிரச்சனையே அல்ல வின்சன்ட் ,கொன்வெ ண்ட் பொம்பிளப்பிள்ளையள் வரும் அதுகளும் நாங்களும் ஒரே மைதனத்தில் இருப்பது என்பது எவ்வளவு பெரீரீய நிகழ்வு. நான் மாணவத் தலைவனாக இருக்கையில் மற்ற மாணவர்களை ஒழுங்கு படுத்துறது. உத்தியோக பூர்வத் தொடர்புகளை வைத்துக் கொள்ளுவது எண்டு வின்சன்ற் ,கொன்வென்ற் பிள்ளையளுக்க அறிமுகமாகிறதுக்கு எடுத்த பிரயத்தனங்கள் எத்தனை நான் மட்டுமில்ல என் சக மாணவ தலைவர்களும் எனக்கு முன்பிருந்தவர்களும் கூட......நாலு பொம்பிளப் பிள்ளையளுக்கு நம்மள தெரிஞ்சா அது நமக்குப் பெருமை எண்டுற காலமது.

விளையாடுவதற்கு இராணுவம் அனுமதித்த நாட்களில் இந்த பகுதி முழுமயினையும் பார்ப்பதற்கு ஆர்வப்பட்டு இராணுவப் பகுதிகளுக்குள் ஒரு நாள் உள்நுழைந்தோம்.

துப்பாக்கி முனையில் ஒருமணி நேரம் வைத்திருந்துவிட்டு பின்னர் ஆசிரியர் முன் னால் எங்களை விடுவித்தனர் அதுவும் தண்ணி குடிக்க வந்தம் தெரியாமல் வந்து விட்டோம் என்று சொன்ன பிறகு.

இலங்கை இராணுவத்தின் மட்டக்களப்பு தலைமையகம் இதுதான். எமது முத்த வெளியில்தான் இராணுவ உலங்கு வானூர்திகள் தரையிறங்கும்.இராணுவத்திற்கு பயிற்சிகளும் இந்த மைதானத்தில் வைத்து கொடுக்கப்படும்.

பெண்கள் பாடசாலை மாணவிகள் பயிற் சியில் ஈடுபடும் சமயங்களில் பெரும்பாலும் ஆண்கள் பாடசாலை மாணவர்களை உள்ளே விடுவதில்லை

இந்தப் பொழுதுகளில் அரைக் காற்சட்டை இராணுவத்தினர் மைதனத்தில் நிறைந்திருப்பர்.அவர்கள் செய்யும் பல சேட்டைகளை என் தங்கைகள் சொல்லக் கேட்டிருகிறேன்.

அப்போது என்னோடு படித்த ஒரு நண்பனெ ாருவனுக்கு இதையெல்லாம் பார்க்கும் போது ஆத்திரமாத்திரமாக வரும்.அவனுக்கு மட்டுமல்ல நாங்களும் இராணுவத்தை திட்டிக்கொள்ளாத நாட்கள் குறைவுதான்.

மட்டக்களப்பின் மிக அழகான பகுதியொன்றை மயானமாக்கிவிட்டிருக்கும் இராணுவம் எங்களுக்கு பயங்கரமாகவே தெரிந்தனர்.

'இவனுகளை இங்கயிருந்து விரட் டணும்.நம்மட மைதானத்தில விளையாட நம்மள வுடுறதுக்கு அவனிட்ட கையேந் தோணுமாம் நீங்க போய் இளிச்சிக் கொண்டு நில்லுங்க......அவனுகள் என்ன சோக்கா நம்மட இடத்துல விளையாடுறானுகள்'

இரணுவத்தினர் கிறிக்கற் உதைப்பந் தாட்டம், கூடைபந்தாட்டமெல்லம் விளை யாடுறதை மைதானத்தின் கம்பி வேலிகளுக்கு வெளியே இருந்து பார்க்கும் எங்களுக்கு கோவம் வரும்.அவன் இதையெல்லம் பார்த்து கொதித்துப் போவான்.

அந்த நண்பன் 1998 இல் படுவான்கரைக்குப் போனான். சமாதானப் பேச்சுவார்த்தக் காலத்தில் அவனை கொக்கட்டிச்சோலையில் சந்திதேன். விடுதலைப் புலிகள் இயக்கதில் இருப்பதாக சொன்னான்.அவனை சந்த்தித்துவிட்டு வரும் போது என்னை கூட்டிச் சென்ற இன்னுமொரு நண்பன் சொன்னான்

'இவன் இப்ப ஆட்லறி பிரிவில இரிக்காண்டா.............'

ம்ம்ம் அவன் தன் கொள்கையில முற்ற வெளி எங்கட மைதானம் ஆக வேண்டுமென்ற கொள்கையில் உறுதியாகவே இருக்கிறான்.

கனவுலகத்திலிருந்து மீள்கிறேன். துப்பாக்கி ஏந்திய அவர்களின் கண்கள் தொடர்ந்தும் என்னை நோக்கியே இருந்தன நண்பன் அவசரப் படுத்தினான் டேய் அவனுகள் உன்னப் பாக்கிறானுகள். நீ புது ஆள் பிரச்சனை வாரதுக்குள்ள கிளம்பணுண்டா.

ம்ம்ம் கிளம்பி வந்து விட்டேன். சொந்த மண்ணில் உலாவுவதற்கும் சுதந்திரமில்லை. பேசவதற்கும் விளையாடுவதற்கும் சுதந்திரம் இல்லை.

அன்னியனின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அடிமைகளாக வாழ வேண்டியுள்ளது.

இந்த நிலையும் ஒரு நாள் மாறும். ஆம் கட்டாயமாய் வெகுவிரைவில்....

Home Office இல் ஒரே நாளில் Visa பெற்றுத்தரும் சேவை

வேலை அனுமதிப்பத்திரம் பெற்றுத்தருதல்

வர்த்தகத்திற்கான வீசாக்கள் பெற்றுத்தருதல்

ஐரோப்பிய நாடுகளுக்கான விண்ணப்பங்கள்

அகதி/குடியுரிமை விண்ணப்பங்கள்.

வீடு, வியாபார ஸ்தாபனம் வாங்குதல் / விற்பனை செய்தல்

வியாபாரப் பிணக்குகள்

**Indra Sebastian Solicitors**

Administrators of Oaths




**Conveyancing -** Sale, Purchase & Lease of Commercial and Residential Properties and all other types including landlord & Tenant disputes

**Intellectual Property**
Protect your business and goodwill. Trademarks, Copyrights & Patents Litigation/Debt Collection/Business, Disputes

**Matrimonial -** Divorce & Ancillary, Proceedings Employment

- Immigration
- Home Office Same Day Visa Service
- Work Permits, HSMP, SEGS
- Business Persons
- Doctors - Medical Training Initiatives
- Care Homes - Cares & Nurses
- Hospitality - F&B, Receptionist, Waiters etc.
- Skilled Workers & Domestic Servants
- Marriage & Certificate of Approval
- Asylum & Human Rights
- European Applications (EEC, WRS)
- Entry Clearance & Visa Refusals Appeal
- Students
- Nationality (UK & Sri Lanka)
- Long Term Residency in UK